சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 14/2024

பெயர். திரு. குமார் நாள் 25.06.2025
த/பெ.

<u>மனுதாரர் சா.3 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை ஏதும் வரவில்லை. மனுதாரர் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு விபத்து ஏற்பட்டதாக கைப்பேசியில் தகவல் வந்தது. நான் சம்பவ இடம் சென்று பார்த்தபொழுது மாடுகள் அதிகம் அங்கு நின்ற கொண்டிருந்தன. பரிமளா சுயநினைவு இல்லாமல் அங்கு இருந்தார் என்றார் என்றால் சரிதான். மனுதாரர்கள் மற்றும் இறந்த நபர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். கைப்பேசி மூலம் ம.சா.ஆ.2 ம் மற்றொரு நபரும் தகவல் தெரிவித்தார்கள். அதன் பிறகுதான் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். விபதது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை. விபத்தை நேரடியாக யார் பார்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ம.த.சா.ஆ.2 பார்த்ததாக என்னிடம் சொன்னார். முதல் விசாரணை வாக்கமூல விவரங்கள் எ னக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் நான் பார்த்த விவரங்களை நான் அதில் கூறியுள்ளேன். முதல் விசாரணை வாக்குமூலம் மனுதாரர்களின் வழக்கறிஞர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டது. விபத்தை நான் நேரடியாகப் பார்க்கவிலலை என்றாலும், மனுதாரர்களுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.